සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது.
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

2ம் தவணை மதிப்பீடு - 2018

| | | | | |
|---|---|---|---|---|
| ශ්‍රේණිය தரம் Grade | 09 | විෂයය பாடம் Subject | வரலாறு I,II | காலம் : 2 மணித்தியாலங்கள் |

பெயர்:....................................... பரீட்சை இல :...............................

**கவனத்திற் கொள்க**

- **பகுதி – I ,ல் சகல வினாக்களுக்கம் இத்தாளிலேயே விடையளிக்க.**
- **பகுதி- II இற்குரிய விடைகளை வேறு தாளில் எழுதி, பகுதி –I உடன் இணைத்து கையளிக்க.**

## பகுதி- I

01. எமது நாட்டின் கரையோரப் பிரதேசத்தைக் கைப்பற்றிய ஒல்லாந்தரின் நாடு,

1. போர்த்துக்கல் 2. ஒல்லாந்து 3. பிரான்ஸ் 4. பிரித்தானியா

02. இந்து சமுத்திரத்தில் தமது வர்த்தக ஆதிக்கத்தை நிலை நிறுத்த ஒல்லாந்தர் யாருடன் போரிட்டனர்?

1. போர்த்துக்கேயர் 2. துருக்கியர் 3. முஸ்லிம்கள் 4. இந்தியர்

03. முதலாம் விமலதர்மசூரிய மன்னனை காண வந்த முதலாவது ஒல்லாந்தர் யார்?

1. கலன் அல்பஸ் 2. ஜெராட் ஹல்ப்ஸ்
3. சிபெல் த வேர்ட் 4. ஜோர்ஜ் வேன் ஸ்பில் பர்ஜன்

04. குற்றவியல் வழக்குகளை விசாரிப்பதனை பிரதானமாகக் கொண்ட ஒல்லாந்தரால் உருவாக்கப்பட்ட உணர் நீதிமன்றம் எது?

1. ராத் வான் ஜஸ்டிஸ் 2. சிவில் ராத்
3. லான் ராத் 4. பிஸ்கல் நீதிமன்றம்

05. ஒல்லாந்தரது காலத்தில் இந்நாட்டில் நிகழ்ந்த பொருளாதார மாற்றங்களை மட்டும் உள்ளடக்கிய விடை,

A- வரி வசூலிக்கும் துறை கப்பித்தான்களின் பார்வையின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டமை.

B- குடும்பம்,பாடசாலை, சொத'து என தோம்பு மூன்று வகைகளாகக் காணப்பட்டமை.

C- சமய பிரசாரத்தித்திற்காக பாடசாலைகளை பயன்படுத்தியமை.

D- முத்துராஜவெலயை விளைநிலமாக்க நடவடிக்கை எடுத்தமை.

1. DCB 2. ABC 3. ABD 4. ACD

06. ஸ்ரீ விக்ரம இராஜசிங்க எனும் பெயருடன் கண்டி மன்னனானவர்,

1. இளவரசன் முத்துசாமி
2. இளவரசன் கண்ணசாமி
3. குண்டசாலை இளவரசன்
4. மகா அஸ்தான இளவரசன்

07. கி.பி 1815இல் கண்டி இராச்சியத்தை கைப்பற்றிய பிரித்தானிய ஆளுநர்,

1. பிரட்ரிக் நோர்த்
2. டொரிங்டன் சாமி
3. தோமஸ் மெட்லண்ட்
4. ரொபரட் நொக்ஸ்

08. கொழும்பு பௌத்த இளைஞர் சங்கத்தை உருவாக்குவதில் முன்னோடியாக இருந்தவர்,

1. திரு.பியதாச பீரிஸ்
2. திரு.அநகாரிக தர்மபால
3. திரு.டி.பி. ஜயதிலக
4. திரு.ஜோன் டி சில்வா

09. இந்நாட்டின் உள்நாட்டு விவசாயம் தொடர்பாக கவனஞ் செலுத்தி, நீர்பாசண புனரமைப்புகளை மேற்கொண்ட பிரித்தானிய ஆளுநர்களையும் நீர்பாசணத் திட்டங்களையும் தொடர்புபடுத்தினால் வரும் விடையானது,

| | |
|---|---|
| 1. ஹென்றி வோட் | A- நீர்பாசண திணைக்களம் அமைத்தல். |
| 2. ஹர்கியூலிஸ் ரொபின்சன் | B- கந்தளாய் வாவி புனரமைப்பு |
| 3. வில்லியம் கிரகரி | C- நீர்பாசணம் தொடர்பிலான நடவடிக்கைகளை ஆராயும் குழு |
| 4. வெஸ்ட் ரிட்ஜவே | D- திஸ்ஸமகாராம வாவி புனரமைப்பு |

1.BDAC 2. ACDB 3. CDBA 4. CDAB

10. A- பரமெஷ்வரா வித்தியாலயம் ஆரம்பித்தமை.

B- குறூ மக்கலம் நிர்வாக சபையின் முதலாவது படித்த இலங்கையராதல்

மேற்கூறப்படட சேவைகளை செய்ததுடன் சமய மறுமலர்ச்சிக்காக பாடுபட்டு உழைத்த தலைவர்,

1. சேர்.பொன்னம்பலம் அருணச்சலம்
2. சேர்.பொன்னம்பலம் இராமநாதன்
3. திரு.டி.பி.ஜயா
4. திரு.ஒராபி பாஷா

11. ஆங்கிலேயர் இந்தியாவிற்கு வந்து, தமது முதல் வர்த்தக களஞ்சியசாலையை எங்கு உருவாக்கினர்?

1. சூரத் 2. அலகபாத் 3. குஜராத் 4. காரைக்கால்

12. பிரித்தானியர் ஆட்சி காலத்தில் இந்நாட்டின் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் வளர்ச்சியில் செல்வாக்கு செலுத்திய காரணி,

 1. நாட்டினுள் வருமானத்தை விட செலவு அதிகமாகவிருத்தல்.
 2. புகையிர, பிரதான வீதியமைப்பு அபிவிருத்தியடைந்தமை.
 3. கோல்புறூக் சீர்த்திருத்தத்தின் செல்வாக்கு.
 4. தோட்டச் செய்கைக்கு உசிதமான பௌதிக, காலநிலை சாதகமாக காணப்பட்டமை.

13. கி.பி.1818 சுதந்திர போருக்கு தலைமை தாங்கிய இருவரை மட்டும் உள்ளடக்கிய விடை,

 1. வீர புரன் அப்பு, டிங்கி ரால
 2. மடுகல்லே திசாவை, வீர புரன் அப்பு
 3. கெப்பெட்டிபொல நிலமே, டிங்கி ரால
 4. கெப்பெட்டிபொல நிலமே, மடுகல்லே திசாவை

14. ஆங்கிலேயர் இந்தியாவிற்கு வந்தபோது, அங்கு ஆட்சியிலிருந்த பலம் வாய்ந்த மொகலாய சக்கரவர்த்தியாக இருந்தவர் யார்?

 1. ஔரங்கசீப்
 2. ஜகங்கீர்
 3. ஜஹன்
 4. அக்பர்

15. கி.பி1873இல் மாளிகாகந்தை வித்யோதயா பிரிவெனாவை நிர்மாணித்த பிக்கு யார்?

 1. ஹிக்கடுவே ஶ்ரீ சுமங்கல தேரர்
 2. வாரியபொல ஶ்ரீ சுமங்கல தேரர்.
 3. வஸ்கடுவே சுபூதி தேரர்
 4. மீகெட்டுவத்தே குணானந்த தேரர்.

16. தேசிய கலாசாரத்தை பாதுகாப்பதற்கு திரு.வலிசிங்க ஹரிஸ்சந்திர அவர்கள் மேற்கொண்ட சேவை,

 1. இந்தியாவில் பௌத்த புனித ஸ்தலங்களை பாதுகாக்க நடவடிக்கை மேற்கொண்டமை.
 2. அநுராதபுரத்தில் பௌத்த புனித ஸ்தலங்களை பாதுகாக்க ஏற்பாடுகள் செய்தமை.
 3. பிரபந்தங்கள் எழுதி தேசிய கலாசாரத்தின் முக்கியத்துவத்தினை வெளிப்படுத்தியமை.
 4. வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்வுகளை நாடகமாக எழுதியமை.

17. இந்தியாவிற்கு வந்த மேற்கத்தேய நாட்டவர்களையும் ,அவர்கள் அமைத்த வர்தத்க கோட்டைகளையும் மிகப் பொருத்தமாக இணைத்தால் வரும் விடை,

| | |
|---|---|
| 1. போர்த்துக்கேயர் | A- ஒரிசா |
| 2. ஒல்லாந்தர் | B- கோவா |
| 3. பிரித்தானியர் | C- பாண்டிச்செரி |
| 4. பிரான்சியர் | D- மதுரை |

1.BACD   2. DCBA   3. ABCD   4. BADC

18. கீழைத்தேய இந்திய வர்த்தக சங்கத்தின் ஆட்சியை முடித்துக் கொண்டு , இந்திய நிர்வாகத்தை பிரித்தானிய அரிசன் கீழ் கொண்டுவர ஏதுவான சம்பவம் எது?

1. 1857 சிப்பாய் கலகத்தின் பின்
2. இந்தியாவில் பிரான்சியரின் நிர்வாகத்தின் சரிவு.
3. இந்தியாவில் மொகலாய ஆட்சியின் வீழ்ச்சியின் பின்.
4. பாகதுர்ஷாவை இந்தியாவின் பேரரசனாக என அறிவிக்கப்பட்டதன் பின்.

19. பிரித்தானியர் இந்திய கரையோரப் பிரதேசங்களில் அதிகாரம் செலுத்துகையில், அவர்களுக்கு நன்மையாக விழைந்த விடயம்,

1. ஔரங்கசீப்பின் மரணத்தின் பின் மொகலாய ஆட்சி சரிவை நோக்கி பயணித்தமை.
2. ஆங்கிலேயரிடம் காணப்பட்ட சிறப்பான கடற்படை.
3. சுதந்திர இராச்சியங்களுக்கிடையே ஒற்றுமையின்மை.
4. இங்கிலாந்து அரசாங்கம் வர்த்த சங்கத்திற்கு உருதுணையாய் இருந்தமை.

20. இந்திய தேசிய சங்கம் உருவாகக் காரணமாக இருந்தவர்,

1. டப்ளியூ.சி.பேனர்ஜி
2. ஒன்டேவியன் ஹியும்
3. மகாத்மா காந்தி
4. ஜவகர்லால் நேரு


(2x20=40 புள்ளிகள்)

## பகுதி – II

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **ஏனைய வினாக்களில் நான்கிற்கு விடையளிக்க.**
- **விடையளிக்க வேண்டிய வினாக்களின் மொத்த எண்ணிக்கை ஐந்து.**

(01)(i) இந்திய வரைபடத்தில் பின்வரும் பிரதேசங்களைப் பெயரிடுக.

A- ........................
B- ........................
C- ......................
D- .......................




(04x2=08புள்ளிகள்)

(ii) A. இந்நிர்மாணத்தைப் பெயரிடுக.

B- இது எந்நாட்டில் அமைந்துள்ளது?

C- இதனை நிர்மாணித்த மன்னன் யார்?

D- இது எந்த சாம்ராச்சியத்திற்கு உரியது?



(04 புள்ளிகள்)

(iii) A- இந்நபர் யார்?

B- இவர் எந்நாட்டவர்?

C- இவரது லைமையில் அரம்பிக்கப்பட்ட சங்கம் எது?

D. இவரது தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை எது?



(04 புள்ளிகள்)

(02) (i) பின்வரும் ஆண்டகளில் ஒல்லாந்தருடன் உடன்படிக்கைகள் கைச்சாத்திட்ட கண்டி ஆட்சியாளர்களைப் பெயரிடுக.

A- கி.பி. 1678 B- கி.பி. 1760 (02 புள்ளிகள்)

(ii) இலங்கையில் ஒல்லாந்தரின் ஆட்சின் கீழ் காணப்பட்ட பிரதேசங்கள் மூன்றாக பிரிக்கப்பட்டிருந்தன. இவற்றுள் இரண்டைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(iii) கரையோரப் பிரதேசங்களை கைப்பற்றிய ஒல்லாந்தர், தமது சமயம், கல்வி செயற்பாடுகளுக்காக மேற்கொண்ட செயற்பாடுகள் ஒவ்வொன்றைச் சுருக்கமாக எழுதுக. (05 புள்ளிகள்)

(03) (i) இலங்கையின் கரையோர பிரதேசம் ஆங்கிலேய வர்த்தக சங்கத்தின் கீழ் காணப்பட்ட போது, ஏற்பட்ட பின்வரும் சம்பங்களுடன் தொடர்புடைய பெயர்களை எழுதுக.

A- வரி வசூலிக்க வந்த அதிகாரிகள்.

B- வர்த்தக சங்கத்தின் நிர்வாகத்திற்கு எதிராக ஏற்பட்ட கிளர்சியை பற்றி கண்டுபிடிக்க வந்த குழு. (02 புள்ளிகள்)

(ii) கண்டி இராச்சியத்தில் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னனுக்கும் மக்களுக்கும் இடையே பிரச்சினைகள் ஏற்பட ஏதுவான காரணிகள் எவை? (04 புள்ளிகள்)

(iii) கண்டி இராச்சியத்தினை கைப்பற்ற ஆங்கிலேயர் கடைபிடித்த, தந்திரமான முறைகள் இரண்டை சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(04)) (i) பிரித்தானியரது ஆட்சி காலத்தில் எமது நாட்டிற்கு கிறிஸ்தவ சமயத்தை பரப்புவதற்கு வந்த மிஷனரிகள் இரண்டின் பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) மிஷனரிகள் தமது சமய பிரசாரத்தை மேற்கொள்வதற்கு பயன்படுத்திய வழிமுறைகள் நான்கினைத் தருக. (04 புள்ளிகள்)

(iii) ஆங்கிலேயர் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதற்கு மேற்கொண்ட நடைமுறைகள இரண்டை சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(05) (i) பௌத்த சமய மறுமலர்ச்சிக்காக, தலைமையாகவிருந்து பின்வரும் செயற்பாடுகளை மேற்கொண்ட நபர்களின் பெயர்களைத் தருக.

A- லங்கோபகார அச்சகம் ஆரம்பித்தமை.

B- பேலியகொடை வித்தியாலங்கார பிரிவெனா ஆரம்பித்தமை. (02 புள்ளிகள்)

(ii) இஸ்லாமிய மறுமலர்ச்சிக்கு தலைமை தாங்கிய அறிஞர் எம்.சீ.சித்திலெப்பை அவர்களால் மேற்கொள்ளப்பட்ட சேவைகள் இரண்டைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) இந்து சமய மறுமலர்ச்சிக்கு தலைமை வகித்த ஒரு தலைவரைக் குறிப்பிட்டு, அவரால் மேற்கொள்ளப்பட்ட சேவைகளுள் இரண்டைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(06) (i) இந்தியாவினுள் ஆங்கிலேயரின் அதிகாரத்தை பரவச் செய்யும் செயற்பாடுகளில், அவர்கள் மேற்கொண்ட தந்திரோபாயமான கொள்கைகள் இரண்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) கி.பி 1857 சிப்பாய் கிளர்ச்சி ஏற்பட ஏதுவான காரணிகள் இரண்டைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) கி.பி 1857 கிளர்ச்சி தோல்வியடைய ஏதுவான காரணிகள் இரண்டைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(07) (i) இந்திய தேசிய சங்கத்தில்,

a- மிதவாதத் தலைவர்களுள் ஒருவர்

b- தீவிரவாதத் தலைவர்களுள் ஒருவரைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) இந்தியர்களுள் தேசாபிமானம் வளர்ச்சியடைய ஏதுவான காரணிகள் இரண்டைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) இந்திய சுதந்திர போராட்டங்களில் மகாத்மா காந்தியின் தலைமையில் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்வரும் போராட்டங்களை சுருக்கமாக விளக்குக.

A- ஒத்துழையாமை போராட்டம்

B- சிவில் சட்டத்தை மீறும் இயக்கம் (05 புள்ளிகள்)